இதுவரை ரூ.6 கோடியே 49 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜீன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில் நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 49 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 18-06-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | எஸ்.சகுந்தலா, அண்ணா காலனி, எலவம்பட்டி & அஞ்சல் திருப்பத்தூர் | – 25,000/– |
| 2. | ஈ. ராஜ்குமார், 61, சின்ன ஒபுளாபுரம் கிராமம், கும்மிடிபூண்டி, திருவள்ளூர் | – 25,000/– |
| 3. | எஸ்.காத்தவராயன், செங்குன்றம் சாலை, அம்பத்தூர், சென்னை 53. | – 25,000/– |
| 4. | மா.மதியழகன், ஆர்.வி.நகர் 3வது குறுக்கு, அண்ணாநகர் கிழக்கு சென்னை | – 25,000/– |
| 5. | வி. ராஜேந்திரன், சோத்துப்பாக்கம், செய்யூர், செங்கற்பட்டு மாவட்டம் | – 25,000/– |
| 6. | லோ. இளங்கோ, புதுக்கோட்டை கிராமம் (ம) அஞ்சல், திருப்பத்தூர் மாவட்டம் | – 25,000/– |
| 7. | கே.ஆர். சந்திரன் மொழிப்போர் தியாகி, விண்டர்பேட்டை, அரக்கோணம் | – 25,000/– |
| 8. | ஆ. வெங்கடேசன் தண்டரை, செய்யாறு திருவண்ணாமலை மாவட்டம். | – 25,000/– |
| | மொத்தம் | ரூ.2,00,000/- |

விபத்துகள் அதிகரிப்பு : தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் -

# இலஞ்சி ரயில்வே மேம்பாலப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்!

## மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியரிடம் நேரில் கோரிக்கை!

தென்காசி.ஜுன்.19.

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் மற்றும் இலஞ்சி ரயில்வே மேம்பாலப்பணிகளை போர்க்கால அடிப்படையில் விரைந்து முடிக்க வேண்டும். விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் தென்காசி மாவட்ட ஆட்சியர் ரஞ்சித் சிங்கிடம் நேரில் சந்தித்து வலியுறுத்தி கோரிக்கை மனு கொடுத்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்துள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது.

தென்காசி மாவட்ட மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக உள்ள பாவூர் சத்திரம் மற்றும் இலஞ்சி ரயில்வே மேம்பாலப் பணிகள்இதுவரைமுழுமையாக நிறைவு பெறாமல் பொது மக்களுக்கு மிகவும் அசவுகரியமாக உள்ளது.

**மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர்!**

இந்த இரண்டு மேம்பாலத் திட்டங்களிலும் நெடுஞ்சாலைத் துறை சார்பிலான பெரும்பாலான பணிகள் ஏற்கனவே நிறைவு பெற்ற நிலையில் ரயில்வே தண்டவாளத்தின் மேற்பகுதியில் அமைக்கப்பட வேண்டிய பாலப் பகுதியின் இணைப்பு பணிகளுக்கான அனுமதியை ரயில்வே நிர்வாகம் வழங்குவதில் ஏற்பட்டு வரும் தாமதமே,இத்திட்டங்கள் நிறைவு பெறாமல் இருப்பதற்கான முக்கிய காரணமாக உள்ளது.

இதனால் பொதுமக்கள் தினந்தோறும் பெரும் இன்னல்களை சந்தித்து வருகின்றனர். குறிப்பாக, பள்ளி, கல்லூரி மாணவர்கள், அலுவலக ஊழியர்கள், வணிகர்கள், விவசாயிகள், அவசர மருத்துவ உதவி தேவைப்படுவோர் உள்ளிட்ட அனைவரும் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். விபத்துகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

எனவே இவ்விவகாரத்தில் மாவட்ட நிர்வாகம் சிறப்பு கவனம் செலுத்தி, தெற்கு ரயில்வே நிர்வாகத்துடன் உடனடி ஒருங்கிணைப்பு மேற்கொண்டு, ரயில்வே தண்டவாளத்தின் மேற்பகுதி இணைப்புக்கான வரைபட ஒப்புதலை விரைந்து பெற்று பாவூர்சத்திரம் மற்றும் இலஞ்சி ரயில்வே மேம்பாலப் பணிகளை போர்க்கால அடிப்படையில் விரைந்து முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த மனுவில் கூறியுள்ளார்.

மாவட்ட ஆட்சியர் சந்திப்பின்போது தென்காசி மாவட்ட ரயில் பயணிகள் சங்க தலைவரும்,தென்காசி மாவட்ட சாலை பாதுகாப்பு குழு உறுப்பினருமான பாண்டியராஜா, தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.வர்த்தகர் அணி அமைப்பாளர் முத்துக்குமார், சாய்ராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# ஆளுநர் உரையில் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் பாதுகாக்கப்படும் என பெயரளவு அறிக்கை!

## தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ. தங்கம் கண்டனம்!

சென்னை ஜுன்.19,

சட்டப்பேரவை ஆளுநர் அறிக்கையில் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் பாதுகாக்கப்படும் என பேயரளவில் அறிவித்த அரசுக்கு தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் ரெ. தங்கம் கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு,

புதிய அரசு பொறுப்பேற்றவுடன், தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் அவர்கள் கட்டுப்பாட்டின் கீழ் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை உள்ள நிலையில், தலைமை செயலகத்திற்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி, துறை சார்ந்த அமைச்சரிடமும், துறை சார்ந்த அதிகாரிகளிடமும் மனு அளிக்க கோட்டைக்கு தினந்தோறும் வரும் மாற்றுத்திறனாளிகளை

காவல்துறை துணை கொண்டு அவர்களை தலைமைச் செயலகத்திற்குள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தி துன்புறுத்தி வெளியே துரத்தும் இந்த அரசு,

“மாற்றுத்திறனாளிகளின் உரிமையை” எப்படி பாதுகாக்கும், இதற்கு சட்டமன்ற ஆளுநர் உரையில் ஒரு அறிக்கையா? என்பதை நினைத்து லட்சக்கணக்கான மாற்றுத் திறனாளிகள் வேதனையில் உள்ளனர்!

எனவே, முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் எப்படி, மாற்றுத்திறனாளிகள் நிபந்தனை இன்றியும், காவல்துறை தொந்தரவு இன்றியும், எளிய முறையில் கோட்டைக்குச் சென்று துறை சார்ந்த அமைச்சர்களிடமும், துறை சார்ந்த அதிகாரியிடமும் அணுகி தங்களுடைய கோரிக்கை மனுக்களை அளித்தார்கள், அதற்கு அதிகாரிகளும் தீர்வும் கண்டு நிறைவேற்றினார்கள்.

அதேபோல முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்கள், மாற்றுத்திறனாளிகள் சமூகம் எவ்வித கட்டுப்பாடும் இன்றியும், நிபந்தனை இன்றியும், சிரமமின்றி கோட்டைக்கு உள்ளே சென்று துறை சார்ந்த அமைச்சர்களிடமும், துறை சார்ந்த அதிகாரிகளிடமும் நேரில் சந்தித்து தங்களின் மனு அளிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மேலும், நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கப்படும் குடியிருப்புகளை முற்றிலும் இலவசமாக வழங்கிட வேண்டும், தாங்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்த மாதாந்திர உதவித் தொகை ரூ.2500/- வழங்க வேண்டும். 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படும் இணைப்பு சக்கர வண்டியினை 6 ஆண்டுகளுக்கு ஒரு முறையாக இணைப்பு சக்கர வண்டி வழங்கப்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளின் மகள் /மகன் ஆகியோருக்கு உள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் மருத்துவ படிப்பு, பொறியாளர் படிப்பு மற்றும் கலை கல்லூரிகளில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும், சாலையோரங்களில் பெட்டிக் கடை (பங்க்) வைப்பதற்கு அனுமதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை இந்த அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்,

வயது தளர்வு காரணமாக 43, 44 வயதுகளில் அரசுப் பணியில் சேரும் மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் ஒய்வு பெரும் வயதை 65ஆக உயர்த்தி அரசாணை வெளியிட வேண்டும் உள்ளிட்ட மேற்படி கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கழக மாற்றுத் திறனாளிகள் அணியின் மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவர் ரெ.தங்கம் தெரிவித்துள்ளார் .




தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் மற்றும் இலஞ்சி ரயில்வே மேம்பாலப் பணிகளை விரைந்து முடிக்க வலியுறுத்தி மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ.தென்காசி மாவட்ட ஆட்சியர் ரஞ்சித் சிங்கை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 103-வது பிறந்த நாளை முன்னிட்டு

# திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. - மாவட்ட மாணவர் அணி சார்பில் கருத்தரங்கம்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!

திருப்பூர், ஜுன். 19-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க மற்றும் மாவட்ட மாணவர் அணி சார்பில் கருத்தரங்கம் மாவட்டச் செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4-ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க மற்றும் மாவட்ட மாணவர் அணி சார்பில் கருத்தரங்கம் இன்று (19.06.2026- வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் திருப்பூர் தாராபுரம் சாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகம் “கலைஞர் அறிவாலயம்” “தளபதி அரங்கத்தில்” மாவட்டச் செயலாளர்

இல.பத்மநாபன் ஆகிய எனது தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் திருப்பூர் மகிழவன் கருத்துரையாற்றுகிறார். கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி, கழக மாணவர் அணி துணை செயலாளர் வீ.ஜீ. கோகுல் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

அதுசமயம் திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கல்லூரி மாணவர்களை கலந்து கொள்ள செய்து விழாவை சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றியம் தி.மு.க. சார்பாக மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் ஆலோசனைப்படி முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு கும்மனூர் ஊராட்சியில் ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கருணாகரன் தலைமையில் கழகக் கொடியேற்றி கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது . உடன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஜி.வேதா. து.அரசன், எஸ்.கருணாநிதி, பி. பாஸ்கர், ஏ.கே கௌதம், என்.குமரேசன், பி.மதிவாணன், ஏ.பிரேம்குமார், பி.அசோக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்.கே.நகர் முன்னாள் பகுதிச் செயலாளர்

# சி.என்.ரத்தினம் மகன் ஆர்.ராஜசேகரன் மறைவு!

## இரா.லட்சுமணன் – நா.கோதண்டன் – கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜுன்.19

ஆர்.கே.நகர் முன்னாள் பகுதி செயலாளர் சி.என். ரத்தினம் அவர்களின் மூத்த மகன் ஆர்.ராஜசேகரன் வயது 64 (17.06.2026 புதன் கிழமை) காலை 11.00 மணியளவில் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதை தெரிவிக்க வருந்துக்கிறோம்.

நேற்று அன்னாரின் இறுதி ஊர்வலம் (18.6.2026 வியாழக்கிழமை) காலை 8.00 மணியளவில் எண். 16A, திருவள்ளுவர் நகர், தண்டையார்பேட்டை, சென்னை - 600081 இருந்து நடைபெற்றது.

இதில் பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், 40வது வட்ட செயலாளர் நா. கோதண்டன், மாவட்ட பிரதிநிதி எம்.எம்.சாமி, பா. கோதண்டன்,ஜி.ராஜ்குமார், எச்.மாரிமுத்து, கோ.தமிழ் செல்வன், க.நரேஷ்குமார், பா.மணிகண்டன், ஆவின் ராஜ்குமார், ஜி.பிரேம்குமார் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஏழாஞ்சேரி கெ. வரதன்

## ஜுன் 19 (2003)



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்திலும் பின்னர், கழகம் துவங்கிய பின், கிளைச் செயலாளர், செய்யாறு வட்டச் செயலாளர், வெம்பாக்கம் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1977–ல் காஞ்சிபுரத்தில் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற அண்ணாவின் “நீதிதேவன் மயக்கம்” நாடகத்தில் நடித்தவர்.**

**ஊராட்சி மன்றத்தில் தலைவர், துணைத் தலைவர், கூட்டுறவு சங்கத் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் என பல்வேறு பதவிகள் வகித்தவர்.**

**பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற ‘இந்தி எதிர்ப்பு போராட்டத்தில்’ காஞ்சிபுரம் அருகே உள்ள நத்தப்பேட்டையில் ரயில் மறியலில் ஈடுபட்டு ஆறுமாத கடுங்காவல் தண்டனையை கடலூர் சிறையில் அனுபவித்ததோடு, நெருக்கடி கால மிசாவில் கைது செய்யயப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**